**<u>சார்பு நீதிமன்றம், குன்னூர்</u>**

MCOP.No.37/2024 நாள்: 01.06.2026

குன்னூர் 2026 – ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 01 ம் நாள் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாக வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் படி திரு. இஸ்ரவேல் தேவராஜ் உதவியாளர் நிலை – II என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது,

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விக்னேஷ் | தொழில் | : |
| கணவர்/தந்தை பெயர் | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலுக்கா | : | சாதி | : |

---

**<u>முதல் விசாரணை, எ.சா.1</u>**

அழைப்பாணையின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை

நான் உதகமண்டலம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியமளிக்கவும் ஆவணங்கள் தாக்கல் செய்யவும் உதகமண்டலம் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பட்டது. இந்த வழக்கில் சாட்சியமளிக்கவும் ஆவணங்கள் தாக்கல் செய்யவும் உதகமண்டலம் வட்டார போக்குவரத்து அலுவலர் எனக்கு அனுமதி கடிதம் அளித்துள்ளார். அனுமதி கடிதம் எதிர்மனுதாரர் தரப்பில் **Ex.Y1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள TN02 AE 6195 வாகனத்திற்கான ஆய்வு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டிருந்தது. அதனை தாக்கல் செய்கிறேன். TN02 AE 6195 வாகனத்திற்கான ஆய்வு அறிக்கை உண்மை நகல் எதிர்மனுதாரர் தரப்பில் **Ex.Y2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆய்வு அறிக்கையில் வாகனத்தின் உரிமையாளர் பெயர் சதீஷ் என காட்டப்பட்டுள்ளது. வாகனத்தின் ஓட்டுநர் பெயரும் சதீஷ் என காட்டப்பட்டுள்ளது. மேற்படி ஆய்வு அறிக்கையில் ஓட்டுநருக்கான ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் செக் ரிப்போர் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் வேறுமாவட்டத்தின் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் அது எங்கள் அலுவலகத்திற்கு தெரிய வர வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல வாய்ப்பு உள்ளது. ஓட்டுநர் உரிமத்திற்கான எண் வழங்கப்பட்டிருந்தால் அதனை வைத்து கண்டறிய இயலும்.

**மறு விசாரணை இல்லை.**

**Tmt.M.Mekala Mythili**
**Sub Judge,**
**Coonoor**